அறிமுகம் “அதிமனிதத்துவத்தின் வழியில்”

— சத்பிரேம்

“அல்லது பிற அனைத்தும் தோல்வியுறும்பொழுது
பூரண மாற்றத்திற்கான திறவுகோல்
நம்முள் மறைந்துள்ளதை நாம் கண்டறியலாம்”

— ஸ்ரீ அரவிந்தர்

## அறிமுகம்

இரகசியங்கள் எளிமையானவை

ஏனெனில் பரம சத்தியம் எளிமையானது. அதுதான் உலகிலேயே மிகமிக எளிமையானது என்பதால் நாம் அதனைக் கண்டுகொள்வதில்லை. இந்த நிலவுலகில் இரண்டல்ல ஒற்றை ஒரு பொருள்தான் நிலைபெற்றுள்ளது என்பதை நவீன இயற்பியலாளரும், கணிதவியலாளரும்கூட உணரத்தலைப்பட்டிருக்கிறார்கள். அந்த ஒன்று என்பதை ஒரு சின்னஞ்சிறு குழந்தையும் நன்றாக அறிந்திருப்பதைப் போல, காலத் தோற்றத்தின் தொடக்கத்திலிருந்தே உருண்டோடி வரும் அதே நுரைக்குமிழி நிரப்பும் சூரியன், துடைத்து வைத்திருக்கும் மணல்கரைப் பரப்பின் மீது மோதிச்செல்லும் அலைகளைப் பார்த்து முறுவலிக்கிறது, புராதனகால ஞாபகங்களிலிருந்து ஊற்றெடுத்துவரும் உன்னதமானதொரு தொடர் இயக்கத்தினை சிந்தித்தபடி, நாட்களையும் துயரங்களையும் ஒற்றைக்கதைக்குள் நெய்தபடி, மாற்றமில்லாத நிகழ்இருப்பினைப் போலவே பழமையை உணர்ந்தபடி, பிரமாண்டமான பரப்பிலே ஆழ்ந்தும் கடல்புறாவின் சிறகங்களை ஆரத்தழுவிக் கொண்டும் உள்ளது அது. ஓற்றை ஒரு நொடியினுள் அனைத்துக் காலங்களின், அனைத்து ஆன்மாக்களின் மொத்தத் தொகுப்பினையும் ஒரே ஒரு புள்ளியுள், மினுக்கலுடன் அடர்த்தியான அடங்காத ஒரு நுரைக்குள் அடக்கி வைத்துள்ளது.

ஆனால் அந்த ஒரு புள்ளியை, அந்தப் புன்னைகையை, இன்னிசை நிரம்பிய அந்த நொடிப்பொழுதை நாம் தொலைத்து விட்டோம். எனவே அந்த ஒரு மெய்ப்பொருள் ஒருக்கத்தை மீட்டுருவாக்கம் செய்ய மீண்டும் முயலுகிறோம் எனக் கூட்டல் கணக்கில் நமது கணிப்பொறியின் பயன்பாடுபோல அனைத்து அறிவுக்கூறுகளையும் எந்தெந்த திக்குகளிலிருந்தெல்லாம் இயலுமோ அங்கிருந்தெல்லாம் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கூட்டியெடுப்பதால் விளையும் ஒரு துல்லியமான இராகத்தில், ஒற்றையொரு பாடலில் உலகங்களையும், மறக்கப்பட்ட பிள்ளை இதயத்தையும் ஒரு சேர அசைப்பதாகப் பாவித்துக் கொள்கிறோம். ஒவ்வொரு சிறு கையேட்டிலும் பதிவுசெய்வதற்காக அந்த இறைஎளிமையை உற்பத்தி செய்துதர நாம் முயன்றிருக்கிறோம் நமது அறிவார்ந்த தொடுவிசைகள் பெருகிப் பெருகி வாழ்க்கையை எளிமையாக்குவதற்குப் பதிலாக, புரட்டி மாற்றிப்போட்டுவிட்டது. அந்தப்பறவை தள்ளித் தள்ளி தொலைதூரம் பறந்து போனது. அந்தப் புன்னகையும் ஏன் ஜொலிப்புடன் திகழ்ந்த அந்த நுரையும்கூட நமது சமன்பாடுகளால் மாசாகிவிட்டன. நமது உடம்பு நம்முடையதுதானா என்று நம்மால் முற்றிலுமாக உறுதிபடக் கூறிக்கொள்ள இயலவில்லை அந்த அழகான எந்திரம் எல்லாவற்றையுமே வெறிகொண்டு விழுங்கிவிட்டது.

இருந்தும், அந்த ஓர் உறுபொருள் ஒன்றே ஒன்று மட்டுமே உள்ளதாகவும் அதுவே

பேராற்றலாகவும் விளங்குகிறது. எவ்வாறெனில் ஒற்றை ஒரு புள்ளியில் ஜொலித்தது எதுவோ அதுவே அனைத்துப் புள்ளிகளிலும் ஒளிர்கிறது. இதனைப் புரிந்துகொண்ட அளவில் பிற அனைத்தும் தெளிவாகிவிடுகின்றன, ஆனால் இவ்வுலகில் உள்ளது ஒரே ஒரு பேராற்றலே - இரண்டு அல்ல. ஒரு சின்னஞ்சிறு குழந்தை கூட இதனை உணர்ந்துள்ளது. அவனே அரசன் அவனைத் தீங்குகள் அணுகாது. ஆனால் குழந்தையோ வளர்கிறது. அது மறந்து விடுகிறது. மனிதர்கள் வளர்ந்து விடுகிறார்கள். தேசங்களும், நாகரிகங்களும் ஒவ்வொன்றும் தத்தமக்கே உரிய வழிகளில் அந்த உன்னதமான இரகசியத்தை – எளிமையான இரகசியத்தை அறிந்து கொள்ளும் வழிமுறைகளை நாடுகின்றனர். யுத்தங்கள் - வெற்றிகள், தியானம் - மாயவித்தை, அல்லது அழகு, மதம், அறிவியல் ஆகியவற்றால் தேடியவண்ணம் உள்ளனர். இருப்பினும், மெய்யாலுமே, யார் மிகுதியும் முன்னேறியுள்ளனர் என்பது நமக்குப் புலனாவதில்லை அக்ரோபோலிஸ் கட்டுமான நிபுணர் தெபான் மந்திரவாதி, கேப்கென்னடி, விண்வெளியாளர் அல்லது சிஸ்டெர்ஸியன் துறவி – ஒருவர் வாழ்வியலை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக வாழ்க்கையைத் துறக்கிறார். ஒருவர் அதைப்பற்றி எந்தப் புரிதலுமின்றி அதனைக் ஏற்றுக்கொள்கிறார். மற்றொருவர் அழகின் ஒரு சிறு கீற்றினை மட்டும் விட்டுச் சென்றிருப்பார் வேறொருவரோ மாற்றமில்லாத ஆகாயத்தில் வெண்மைத் தடங்ளைப் பதித்திருப்பார் - நாம் இந்தப் பட்டியலில் கடைசி ஆளாக இருக்கிறோம் அவ்வளவே, இன்னமும் நமது மாயவித்தையைக் கண்டுபிடிக்க இயலவில்லை அந்தப் புள்ளி-ஆற்றல் நிரம்பிய அச்சிறுபுள்ளி உலகமெனும் திறந்தவெளிக் கடற்கரையில் இருக்கிறது. யாரொருவர் கைப்பற்றுகிறார்களோ அவருக்காக அது ஒளிர்ந்து கொண்டிருக்கறது விண்மீன் கூட்டங்களின் கீழே, நாம் மாந்த இனத்தவரானதற்கும் முன்னர் அது எப்படி ஒளிர்ந்ததோ அவ்வாறே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

எவ்வாறாயினும், சிலர் அந்தப் பரம இரகசியத்தைத் தொட்டு விட்டார்கள் என்றே சொல்லலாம். ஒருவேளை கிரேக்கர்கள் அறிந்திருக்கலாம், எகிப்தியர்களுக்கும், சர்வநிச்சயமாக வேதகால இந்தியரிஷிகளுக்கும்கூட தெரிந்திருக்கலாம். இரகசியங்கள் என்பன ஓர் அழகிய மரத்தின் மலர்களைப் போன்றவை. அவற்றிற்கென்றே பிரத்யோகமான ஒரு பருவகாலம் இருக்கும் பார்வையில் பட்டிருக்காது ஆனால், வளர்ந்து விட்டிருக்கும், திடீரென்று பூத்துக்குலுங்கும்.

எல்லாவற்றிற்குமே தனித்துவமான ஒரு நேரம் அமைந்துள்ளது. நமது தலைக்குமேல் போகும் நட்சத்திரங்களின் இணைநிகழ்விற்கும், நுரைத்துகள் அப்பியிருக்கும் பாறையின் மேல் செல்லும் நாரையின் வழித்தடத்திற்கும், ஒருவேளை அந்த நுரைக்குமிழிக்கும் சேர்த்தே, ததும்பி வரும். அலைகளிலிருந்து மாற்று வடிவம் வந்தமையும். வகுக்கப்பட்டுள்ள தனித்ததொரு விதிமுறையின்படி அனைத்தும் அசைகின்றன. மனிதனும் அவ்வாறேதான் ஓர் இரகசியம், அது அறிவு – அது ஆற்றல்

– அது தனக்கென சொந்தமான இயல்பான போக்குடன்கூடிய நேரம் அமையப் பெற்றுள்ளது. ஏனைய பிற உயிர் அணுக்களைவிட முன்சென்றுவிட்ட ஒரு சின்னஞ்சிறு அணு தனது அறிவின் ஆற்றலுக்கு உருவம் அளிக்க முடியாது. அதாவது, உலகத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்துவிட முடியாது. உன்னதமான மரத்தினில் மலர்களை விரைவுபடுத்தி மலர்வித்துவிட முடியாது – எதுவரை எனில், பரிணாம மாற்றத்தின் ஏனைய பரப்பனைத்தும் தயாராகும் வரை என்பதாகும்.

ஆனால் அந்தத் தருணம் வந்துவிட்டது. பூமி முழுதும் வெடித்துச் சிதறுகிறது காணாத அந்த மலர் ஒரு வேளை சீழ்ப்பிடித்த புண்ணைப்போலவும் இருக்கலாம் கல்கத்தாவில் காந்தி சிலையின் தலையைத் துண்டித்துள்ளனர்.

இயலவில்லை, அந்தப் புள்ளி-ஆற்றல் நிரம்பிய அச்சிறுபுள்ளி உலகமெனும் திறந்தவெளிக் கடற்கரையில் இருக்கிறது. யாரொருவர் கைப்பற்றுகிறார்களோ அவருக்காக அது ஒளிர்ந்து கொண்டிருக்கிறது விண்மீன் கூட்டங்களின் கீழே, நாம் மாந்த இனத்தவரானதற்கும் முன்னர் அது எப்படி ஒளிர்ந்ததோ அவ்வாறே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

மாணவர்கள், பழைய கடவுளர்கள் பொடிபடுகிறார்கள். நிரப்பப்பட்ட அறிவு அழிவினுக்காக கூக்குரலிடுகிறது. தங்களுடைய சிறைகளை உடைத்தெறிய வெளியிலுள்ள காட்டுமிராண்டிகளைத் துணைக்கு அழைக்கின்றனர் தென்மை ரோமானியர்கள் செய்ததைப் போலவே. ஏனையோர் இரசாயன சொர்க்கங்களை துணைக்கழைக்கின்றனர். இந்தக் கொடுமையைவிட ஏனைய வழிமுறைகள் எவ்வளவோ பரவாயில்லை எனலாம். உருமாற்றத்திலிருக்கும் அற்புதமான உடலின் அனைத்து உயிரணுக்கள்

மூலமாக இந்த பூமி தனது மேனியின் அனைத்துக் கீறல்கள் வழியாகவும் பெருமூச்செறிகிறது; வேதனைக் குரலில் முனகுகிறது. நம்முடைய காலத்தில் முன்னிற்கும் இந்தக் கெடுதியானது மாறுவேடத்தில் வந்துள்ள ஒரு புதுப்பிறவி என்றே எண்ணிட வேண்டியுள்ளது என்ன ஆகியுள்ளது என்றால், இதனை எப்படிக் கையாள வேண்டும் என்பது நமக்குத் தெரியவில்லை.

பிரம்மாண்ட மனிதக்குரங்குகளிலிருந்து முதல் ஆதிமனிதன் வடிவுற எத்தனை மாற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்ததோ அவ்வாறே இப்புதிய பரிணாம மாற்றத்தின் கடும் சோதனைகளின் முன் இன்று நாம் நிற்கிறோம். ஆனால் இந்த மண்ணுலக உடலானது ஒன்றே ஒன்று என்பதால், பேருண்மையைப்போல தீர்வும் ஒன்றுதான். உருமாற்றம் பெற்ற அந்த ஒற்றை ஒரு தனிப்புள்ளி மற்ற அனைத்தையும் நிச்சயமாக உருமாற்றம் செய்துவிடும். எப்படியானாலும் திருத்தியமைக்கப்பட்டுள்ள நமது நீதிச்சட்டங்களிலோ, நிர்வாகமுறைகளிலோ, அறிவியலிலோ, சமயங்களிலோ, சிந்தனைப்பள்ளிகளிலோ அல்லது பலவகை வண்ணங்களைப் பூசிக்கொண்டுள்ள கோட்பாடுகளிலோ அந்த ஒற்றைப் புள்ளியைக் காண முடிவதில்லை – ஏனெனில் மேற்சொன்ன துறைகள் அனைத்துமே

மிகப் பழமையான இயந்திரகதி நிறுவன ரீதியானவை. அதில் எந்த நிலையிலும் ஒரு சிறு ஆணியைக் கூட இறுக்கிடவோ, புதிதாக இணைத்திடவோ அல்லது மேம்படுத்திடவோ இயலாது அந்த உச்சக் கட்டத்தில் நாம் மூச்சுத் திணறிக் கிடக்கிறோம்.

மேலும், அந்தப் புள்ளிக்கும் நமது அறிவுமேன்மைக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது சொல்லப்போனால், திரிபுவாதம்தான் அந்த முழு எந்திரத்தையும் முன்னே நகர்த்தியுள்ளது. – அத்துடன் மனிதனைச் செம்மைப்படுத்துவதாகக் கூறி அவனுடைய பலவீனங்களையும் சென்றகாலப் பெருமைகளை மட்டுமே மகிமைப்படுத்தியுள்ளது.

“மனிதனுடைய முழுமையற்ற நிலை இறைஇயற்கையின் இறுதி வார்த்தை அல்ல அதேபோல அவனுடைய முழுமை நிலையும் மெய்ப்பொருள் முழுமை நிறைவின் உச்சமாக இருக்க முடியாது” என்கிறார். ஸ்ரீஅரவிந்தர் மெய்தான். நம்முடைய அறிவாற்றலின் தொடுதலையும் தாண்டியதோர் வருங்காலத்தில் இந்தப்புள்ளி செறிந்திருக்கிறது. ஆனால் அது பிறவியின் சூழ்நிலையிலே வளர்ந்துகொண்டேயிருக்கிறது. இலைகளையெல்லாம் உதிர்த்துவிட்ட பின்னும் செந்தீக்கொன்றை மரம் பூக்களால் நிரம்பியிருப்பதைப்போல….. நாம் அதன் இதயத்தை மட்டும் தொட்டுவிட முடியுமானால் பாருங்கள் அங்கே வருங்காலத்திற்கான ஒரு திறப்புக் கைப்பிடி அமைந்துள்ளது தெரிகிறது. ஆனால் எங்கே அந்த இதயம்-நமது மனிதத் தகுதிநிலையில் அது இல்லை எனில் என்னவாவது?

ஒருநாள் ஆதிமுதல் நீர்வாழ்பிராணி கரையில் ஊர்ந்துவரும்போது உயிரியாகிப் பின் பறக்கத் தொடங்கியது. காடுகளிலிருந்து வெளியேறிய முதல் ஆதிகள் வியப்புடன் புதிதாக இவ்வுலகத்தைப் பார்த்தனர். எல்லா நிலைகளிலும் தோன்றும் அடக்க முடியாத உணர்வு ஒன்றுதான் என்பது அதைவிட அடுத்த படிநிலைக்குச் செல்வதைப் பற்றிய நினைவுகளில் தீவிரமாக இறங்குதலே ஆகும். ஒரு வேளை உருமாற்றத்திற்கான ஆற்றல் அனைத்தும் அந்த ஒரு எளிமையான பார்வையிலேயோ அல்லது – வேறொன்றைத்தேடும் நிலையிலேயோ கருக்கொண்டிருக்கலாம். அந்த ஒரு பார்வை, அந்தத்தவிப்பு, தெரியாத ஒன்றிற்காக அரற்றும் அந்தப்புள்ளி மதகுகளின் பூட்டைத்திறந்து வருங்காலத்தினுள் வெள்ளமெனப் பாயச் செய்யும் ஆற்றலினை உள்ளே வைத்திருக்கலாம்.

அறிவின் மின்னணு, சொர்க்கங்களைவிட மிகக் கூடுதலான அற்புதங்களைக் கொண்டுள்ளது ஒரு வருங்காலம் நிச்சயமாக உள்ளது என்பதை நாம் உறுதி செய்கிறோம். மனிதன்தான் இறுதிநிலை என்பதுமில்லை. நீரிலிருந்து உயிர்த்து மாறி கரைக்கு வந்து, உயர்வினை உணர்ந்த ஊர்வனதான் பரிணாம வளர்ச்சி அலையின் உச்சகட்ட நிலை என்பதாகிவிடுமா? இதன் உட்பொருளை நாம் நமக்குள்ளேயே பார்த்துத் தெளிவடைகிறோம். எதனையும் விஞ்சிடும் எந்திரங்களைக் கண்டுபிடித்து படைத்துக்கொண்டேயிருக்கிறோம். மாந்தஇன ஆற்றல் தனது எல்லைகளையும்மீறி, இடையறாது

விரிவாக்கம் பெற்று, வியாழக்கிரகத்தையும், வெள்ளிக்கிரகத்தையும் நோக்கி அடியெடுத்து வைக்கும் அளவிற்கு முன்னேறிக்கொண்டேயிருக்கிறது. ஆனால் அப்படித் தெரிவது கூட ஒரு தோற்றப்பிழைதான் மேலும் மேலும் ஏமாற்றமளிக்க கூடியதாகவும், கீழே அமுக்கி அழுந்திடச் செய்வதாகவுமே உள்ளது.

மெய்யாலும், நாம் எதனையும் விரிவாக்கிடவில்லை. பிரபஞ்சத்தின் மறுகோடிக்கு சிறுமையான சின்னஞ்சிறு பிறவியை அனுப்பிவைத்துப் பார்க்கிறோம் தனக்கு இணையானவரை எப்படிப் பாதுகாப்பது என்றுகூட அதற்குத் தெரியாது. தன்னுடைய குகைகளில் வசிப்பது ஒரு டிராகனா அல்லது பூனைக்குரல் மகவா என்பதையும் அறியாதது அது. நாம் முன்னேறுவதில்லை, கொள்ளளவிற்கும் அதிகமாக இராட்சத சிந்தனா பலூனைக் காற்றடித்து காற்றடித்துப் பெரிதாக்கி எழச்செய்கிறோம். அது நமது முகத்திலேயே வெடித்துச் சிதறலாம் அல்லவா? மனிதனை செம்மை செய்துவிடவில்லை மாறாக நாம் அவனை மேலும் பூதாகாரமாக்கியிருக்கிறோம். அவ்வளவே, அதே சமயம், அது வேறெவ்விதமாகவும் ஆகிவிட முடியாது. நம்முடைய நேர்மையிலோ, அறிவுத்திறத்திலோ உள்ள சிறு குறைபாட்டினால் இத்தவறு நிகழவில்லை. தாங்கும் நிலைக்கும் மேலே உந்கப்படுமேயானால் மகா புனிதர்களையோ மகா எந்திரங்களையோ அல்லது இரக்கமற்ற கொடூர அரக்கர்களையோகூட இவை உருவாக்கிடலாம்.

ஊர்ந்திடும் பிராணி ஒன்று புனிதமானதாகவே இருந்தாலும் அது தனது வளைக்குள் உட்கார்ந்து கொண்டு பரிணாமத்தின் உச்சியை எட்டிவிட முடியுமா என்ன? புனிதத்துறவியாக இருந்தாலும் அவ்வாறேதான் சரி நாம் அனைத்தையும் மறந்து விடுவோம். உண்மைநிலை என்னவெனில் - மனிதரின் உச்சநிலையாயினும் - ஏதாவதொன்றின் உச்சிநிலையாயினும் எடுத்துக்கொண்டிருக்கும் விஷயத்தின் மேம்பட்ட தரத்தினை பூரணப்படுத்துவதோடு நின்றுவிடுவதில்லை. அந்த ஒன்று அவன் எதாக விரும்புகிறானோ அதே போன்றதும் இல்லை. அந்த ஒன்றோ வேறொன்றில் நிலைபெற்றுள்ளது. இப்படிப்பட்டதுதான் கூர்தலறத்தின் விதி. மனிதன்தான் முடிவு நிலை அல்ல. மனிதன் உருமாறிக்கொண்டிருக்கும் படிநிலையிலுள்ள ஒரு ஜீவன் என்று நெடுங்காலத்திற்கு முன்னரேயே சொல்லியிருக்கிறார் ஸ்ரீ அரவிந்தர், அவன் அதிமனிதத்துவத்தினை நோக்கி முன்சென்று கொண்டிருக்கிறான். எவ்வாறு எனில், மாமரத்தின் உச்சாணிக் கிளையில் துளிர்க்கவிருக்கும் பொட்டுத்துளி சிம்பு ஒன்றை மாங்கொட்டைத் தன்னுள் உள்ளடக்கியிருப்பதைப்போல ஆகும்.

எனவே, நமது முழுநேர மெய்யானபணியும், மொத்தச்சிக்கலும் எதிர்கொள்ளும் கேள்வி அனைத்துமே, காலங்கள் தோறும் தீர்வினைத் தேடிக்கொண்டேயிருக்கும் நிலை அதுவே தொடர்கிறது என்றாலும் தான் தற்போது உள்ளநிலையானது எப்படியாவது இந்த உருமாற்றத்தைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்பதில் தீவிரங்கொண்டு இப்பூமியின் அங்கங்களை வலிக்க வலிக்க

ஒவ்வொன்றாகப் பிய்த்தெறிந்தபடி இருக்கின்றது.

நீட்சேயும் இதனையே எடுத்துரைத்தார். ஆனால், அவருடைய மனிதன் இன்றைய மனிதனின் பிரம்மாண்டம். அவ்வளவே, ஐரோப்பா முழுதும் தடம் பதித்துச் சென்ற அவரால் என்ன செய்ய முடிந்தது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அது பரிணாம மாற்றத்திற்கானது அல்ல செம்பொன் முடியுடன், மாநிற வண்ணம் கொண்ட கொடூர மனிதனின் தன்முனைப்பின் வடிவம் முந்தைய காட்டுமிராண்டித்தனம்தான் திரும்பியுள்ளது எனலாம்.

நமக்கு ஒரு அதிமனிதன் தேவையில்லை. நமது தேவையோ வேறு ஏற்கனவே அது மனிதனின் இதயத்தினுள் குறுகுறுத்துக்கொண்டிருக்கிறது. பாஷே இசைப்பாடலுக்கும் கீழ்ப்பிறவி ஒன்றின் முதல் கூச்சலுக்கும் எத்தனை வேறுபாடு உள்ளதோ அதைப்போன்றதுதான் இந்த மனிதநிலை வேறுபாடும். சொல்லப்போனால், வருங்காலத்தின் சுமுகங்களுக்காக நமது உட்செவி திறக்கும் அந்தக் கணத்தில் பாஷே இசைப்பாடல் ஒலிகூட சுமாரானதாகவே தோன்றலாம்.

இந்தத் திறப்பு - இந்தப்புதிய வளர்ச்சியினைத்தான் நாம் ஆய்வு செய்ய விரும்புகிறோம் - ஸ்ரீ அரவிந்தரிடமிருந்தும் - அவரது வழியில் தொடர்ந்து செயலாற்றிய அன்னையிடமிருந்தும் நாம் கற்றுக்கொண்டிருக்கிற அந்த வெளிச்சத்தில் மேலும் தொடருவோம் உருமாற்றத்தின் படிநிலையின் வழிமுறைகளை அறிந்து கொள்வோம். அதனால் நாமே கதவின் கைப்பிடியை இறுகப்பற்றித் திறந்திடுவோம். நமது சொந்த பரிணாமத்தின்படி திட்டமிட்டுப் பணியாற்றுவோம் - நமது பரிசோதனை முயற்சிகளில் இறங்குவோம். ஏனையோர் இராட்சதப்பிறவிகளின் சோதனைக் குழாய்களில் கருக்களை உற்பத்தி செய்ய முயலுகிறார்கள் எதிரொலிகளையும் அவர்கள் கேட்பார்களாயினும் அவரவர் வாழ்வின் இரகசியம் வாழ்க்கையில் இல்லை. மனிதருடையதும் மனிதருக்குள் இல்லை "தாமரையின் இரகசியம் எவ்விடத்திலிருந்து அது வளர்கிறதோ அந்த சகதிக்குள் பொதிந்திருக்கிறது" என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். மேலும் அந்த சகதி மண்ணும், சூரியனின் ஒற்றைக் கிரணமும் ஒரு மேம்பட்ட உயர்வான இசைவினை உருவாக்க இணைகின்றன. இந்தச் சங்கமத்தின் அடித்தளம், உருமாற்றத்தின் இந்தப்புள்ளி - இவற்றையே நாம் கண்டுபிடித்தாகவேண்டும். பிறகு அந்த அமைதியான குழந்தை கடற்கரையிலிருந்துகொண்டு, அடங்காததோர் காட்டு நுரையை ஆச்சர்யமாக ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தது, உலகங்களை எல்லாம் இயக்கும் அந்த தெய்வீக இசை, அதனுடைய நேரத்திற்காக அந்த ஒரு அற்புதம் காத்துக்கொண்டிருந்தது.

மேலும் மனிதனால் முடியாததுபோல் இருந்தது குழந்தையின் விளையாட்டாக மாறும்.